Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 374/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேம்குமார் | ஜாதி | : | |
| த/பெ | : | ஈஸ்வரன் | தொழில் | : | லாரி ஓட்டுநர் |
| கிராமம் | : | சுரக்காய்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சுரக்காய்பட்டியில் குடியிருந்துகொண்டு லாரி ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் லாரிக்கு சென்றுவிட்டு ஒட்டன்சத்திரத்தில் நின்றுகொண்டிருந்தபோது, எனக்கு தெரிந்த நபர் எனக்கு போன் மூலமாக எனது தகப்பனார் ஈஸ்வரனுக்கு வாகன விபத்து ஏற்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக சொன்னார்கள். நான் உடனே திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த எனது தகப்பனாரை பார்த்தபோது, இடது பக்க இடுப்பு மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது தகப்பனாரை வண்டி அடித்துவிட்டதாகவும், காரமடைக்கும் தருமத்துப்பட்டிக்கும் இடையில் மேற்டி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். நான்

திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் என் தகப்பனார் சிகிச்சைக்கு உதவியாக இருந்தபோது கன்னிவாடி காவல்நிலைய போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். அந்த **புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 374/2023**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரன் | ஜாதி | : | |
| த/பெ | : | பெரியகருப்ப தேவர் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | சுரக்காய்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சுரக்காய்பட்டியில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பிரேம்குமார் எனது மகன். கடந்த 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் 12.00–01.00 மணியளவில் நான் கன்னிவாடிக்கு சென்றுவிட்டு எனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது, தருமத்துப்பட்டிக்கும் காரமடைக்கும் இடையில் மெயின்ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நான் வந்த அதே ரோட்டில் எனக்கு பின்னால் வந்த நான்கு சக்கர வாகனம் எனது மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டது. அதில் வலது பக்க இடுப்பு பகுதியிலும், வலது பக்க கால் பகுதியிலும் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த நபர்கள் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். என் மீது மோதிய நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநரை அன்றையதினம் நான் பார்க்கவில்லை. நான் திண்டுக்கல்

அரசு மருத்துவமனையில் 30 நாட்கள் சிகிச்சை பெற்றேன். இவ்வழக்கு சம்மந்தமாக கன்னிவாடி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் மீது மோதிய வாகனத்தை பற்றியோ, அதை ஓட்டி வந்த ஓட்டுநரை பற்றிய விபரமோ உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 20 நாட்கள் கழித்து தான் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor